இலங்கை கப்பல் மோதி பலியான

# புதுகை மீனவர் உடல் தோண்டியெடுப்பு

அறந்தாங்கி, நவ. 18–

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர் ராஜ்கிரண் மற்றும் சுகந்தன், சேவியர் ஆகியோர் கடந்த 19ம் தேதி நடுக்கடலில் மீன் பிடித்தபோது, இலங்கை கடற்படையினர் ரோந்துக் கப்பலால் படகை இடித்து தள்ளினர். இதில் படகு மூழ்கியது. மீனவர்கள் சுகந்தன் மற்றும் சேவியரை இலங்கை கடற்படையினர் மீட்டனர். 2 நாட்களுக்கு பிறகு, ராஜ்கிரண் சடலமாக மீட்கப்பட்டார். பின்னர் அவரது உடல் சொந்த ஊர் கொண்டுவரப்பட்டு கோட்டைப்பட்டினம் சுடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் ராஜ்கிரண் மனைவி பிருந்தா, ஐகோர்ட் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், கணவரின் உடலை யாரிடமும் காட்டாமல் அடக்கம் செய்தனர். இலங்கை கடற்படையால் அவர், சுட்டு கொல்லப்பட்டிருக்கலாம். போட்டோவில் அவர் முகம் மற்றும் உடலில் காயங்கள் இருந்தன என கூறியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், ராஜ்கிரணின் உடலை தோண்டி எடுத்து மறுபிரேத பரிசோதனை உத்தரவிட்டார். அதன்படி இன்று தாசில்தார் ராஜா மற்றும் மீனவர் சங்க பிரதிநிதிகள் முன்னிலையில், போலீசார் மீனவரின் உடலை தோண்டி எடுத்து மறு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



மீனவர் உடல் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் முரசு
Thu, 18 November 2021
tm.dinakaran.com/c/64419465